## வைர விழா காணும் வல்வை பிரதேச வைத்திய சாலையும்

## வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்ட சாதனையாளர்களின் கௌரவிப்பும்.

தனித்தனிக் கற்களால் உருவாகுவதே கோபுரம். சமுதாயமும் அவ்வாறே, சமுதாயத்தின் அங்கமாக மனிதன் விளங்குகின்றான். அவன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பது கேள்வியில்லை. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை அறிந்தால் வாழ்க்கையில் தோல்வியில்லை என்பது கவிஞனின் அழகான வரிகள். ஆம் வள்ளுவர் குறள்தனை தந்தார். வையம் உள்ளவரை அவரை நினைவு கொண்டு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தோன்றிற் புகளோடு தோன்றுக அஃதிலார் தோன்றினும் தோன்றாமை நன்று என்பதற்கொப்ப மனிதனும் மண்ணுக்குப் பெருமை சேர்க்க அவன் வாழும் புறச் சூழலுக்கு அமைய செயற்கரியது செய்து, தான் வாழ்ந்த சமுதாயத்தில் நிலைத்திருக்க நினைப்பவன் எவனோ அவனே மனித குலத்தின் தூண் ஆவான். ஒரு கோபுரச் சிற்பங்கள் ஒரு போதும் கோபுரத்தை தாங்கி நிற்பதில்லை. அவ்வாறு சித்தரிக்கப்பட்டிருந்தால் உண்மையும் அதுவல்ல. தாங்கி நிற்பது அத்திவாரமும் தூண்களுமே.

இவ்வாறு உலகின் எங்கெல்லாம் அப்படிப்பட்டவர்கள் வாழ்கிறார்களோ, வாழ்ந்திருக்கின்றார்களோ அத்தகைய கனவான்களையும் சாதனையாளர் களையும் வரலாறு மறந்தால் மனித சமுதாயம் கடற்கரை மணல் மீது கட்டப்பட்ட மணல் வீடாக அமைந்துவிடும். சாதனையாளர்களையும் அவர் தம் சாதனையையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டால் வரலாறு என்றும் வழிவிட்டு நிற்கும்.

இன்று நம் சமூகம் ஒரு நெருக்கடியான சூழலுக்கு முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. மதிப்பிட முடியா சொத்துக்களை இழந்து பல்லாயிரக் கணக்கான உறவுகளை இழந்து உடல் உள ரீதியான பாதிப்புக்களுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு புறமிருக்க எமது முழு சமூகமே காயப்படுத்தப்பட்டு பின்னடைவிற்கு ஆட்படுத்தப்பட்டமை எம்மினத்தின் வாழ்வியலில் காலம் காலமாக பயிற்றப்பட்டு வந்த பண்பாட்டுக் கருவூலங்கள் முற்று முழுதாக சிதைவுற்றுப் போகும் நவீன ஆபத்துகள் வேருன்றிக் காணப்படுகின்றது. இத்தகைய இருண்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகப் பார்வையாளர்களினால் பாரம்பரியம் பேணல், நெறிப் படுத்தல் அவற்றை ஆவணப் படுத்தல் சாதனையாளர்களையும் சமூகத் தொண்டர்களையும் கௌரவித்தல் போன்றன மாறிவரும் நம் இளம் சந்ததியினருக்கு முன்னால் வைக்கப்பட வேண்டியது கட்டாயக் கடப்பாடாகும்.

அந்தவகையில் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமாக ஈழத்தின் வடக்கே அமைந்திருக்கும் வல்வெட்டித்துறை நகர் ஈழத் தமிழருக்கு மட்டுமல்லாது உலகத் தமிழருக்கே உன்னதமான இடமாக விளங்குகின்றது. அங்கே தம் மக்களுக்காகவும் சமூக மேம்பாட்டிற்காகவும் வீரம் செறிந்த மைந்தர்களால் பல்வேறு துறைகளிலும் தம் ஆளுமைகளாலும் தலைமைத்துவப் பண்புகளாலும் தன்னார்வத்துடன் பயனுறு பணிகளை ஆற்றிச் சென்றவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் பண்பை வல்வெட்டித்துறை மண் தொடர்ந்தும் பேணிவருகின்றது. போர்க் காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இப் பணி வல்வெட்டித்துறை

பிரதேச வைத்திய சாலை அபிவிருத்தி சபையினர் தொடர்ந்து செய்து வருகின்றனர். வல்வை மண் கடலும் கடல் சார்ந்த முயற்சிகளையும் தம் செல்வமாக கொண்டு சாதனைகள் பல படைத்த போதும் காலத்திற்கு காலம் இயற்கையாலும் வேறு சக்திகளாலும் பல அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியே தன் பயணத்தை தொடர்கிறது. மீண்டும் மீண்டும் வல்வை மண் வல்லமையுடன் எழுந்து நிற்கின்றதற்கும், அதன் பெருமைகளை தன்னகத்தே பெயருக்கு ஏற்றால் போன்று வல்லமையுடைய வல்வெட்டித்துறை பல சான்றுகளையும் பண்புகளையும் கொண்டிருப்பதற்கும் வல்வை மண்ணில் புதையுண்டிருக்கும் சிறப்பியல்பை சித்தரிக்கவே வல்வை மண்ணின் நுழை வாயிலூடாக வாசகர்களை அழைத்துச் செல்கின்றது இக் கட்டுரை.

அன்னபூரணி என்னும் அழகான சொல் ஈழத் தமிழருக்கு பெருமை சேர்த்து நிற்பதற்கு வல்வெட்டித்துறை மண்ணில் பிறந்து வளர்ந்த மேஸ்திரிகளால் கட்டப்பட்ட பாய்மரக் கப்பல் அவர்களாலேயே அமெரிக்கா வரை எதிர்த்து வந்த புயலையும் மழையையும் பொருட்படுத்தாது கடலைக் கிழித்து செலுத்தப்பட்டு சாதனை படைத்தற்கு முன்பும் பின்புமாக பல நூற்றாண்டுகளாக சாதிக்கப்பட்ட சாதனைகள் பல வல்வை மண்ணில் புதைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் வெறும் கோபுரச் சிற்பங்களென இருந்து விடாது வல்வை மாதாவின் மடியில் தவழ்ந்த மைந்தர்களின் தன்னலமற்ற வரலாறென ஆவணப்படுத்த வேண்டிய சமூகப் பொறுப்பு இன்றைய இளம் சந்ததியினருக்கு உண்டு. தவறுகள் விடப்பட்டால் அவற்றை திருத்தி அமைப்பதற்கு சான்றுகளை தேட வேண்டியிருக்கும். தமிழர் வரலாறும் அவர் தம் பெருமையும் புதையுண்டு போனதற்கும் மகாவம்சத்தில் திரிபு படுத்தப்பட்டமைக்கும் சங்க காலத்திற்குப் பின்னர் வாழ்ந்த நம் இனம் வரலாற்றை ஆவணப்படுத்தாமையே காரணம்.

## அன்றைய வல்வெட்டித்துறை இந்திராணி ஆஸ்பத்திரி (Hospital) யும்இன்றைய வல்வை பிரதேச வைத்திய சாலையும்

வரலாற்றில் வல்வெட்டித்துறை எனும் ஆவண நூலின் ஆசிரியரான திரு. பா. மீனாட்சி சுந்தரம் அவர்களால் வல்வை பிரதேச வைத்திய சாலையின் வைர விழா சிறப்பிதழில் குறிப்பிடப்பட்டதையும் எம் ஊரவர்களின் தகவல்களின்படியும் எமது பிராந்தியத்தின் வைத்திய முறை பண்டைய நாட்டு வைத்திய முறையாகவே இருந்து வந்துள்ளது. வைரவிழா சிறப்பிதழில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1813ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தடைந்த பின்னர் கல்வி நிலையிலும் வைத்திய முறையிலும் தமது கவனத்தை செலுத்த ஆரம்பித்தனர். யாழ்ப்பாணம் வந்த மிஷனரிமாரில் எட்வர்ட் உவாறன் (Rev.Edward Waraen) என்பவரும் ஜேம்ஸ் றிச்சாட்ஸ் (Rev.James Richard) என்பவரும் வைத்திய பட்டம் பெற்றிருக்காவிட்டாலும் பென்சில்வேனியா நகரில் உள்ள வைத்தியசாலையில் ஒரு வருடம் பயிற்சியினை மேற்கொண்டிருந்ததினால் தாம் வசித்த பகுதிகளில் நோயாளர்களுக்கு வைத்தியம் பார்த்து மருந்துகளை கொடுத்து வந்தனர். சிறிது காலத்தின் பின்னர் 1816ல் உவாறன் அவர்கள் அரசினரிடம் உதவி பெற்று தெல்லிப்பளையில் ஒரு சிறிய ஆங்கில

வைத்தியசாலையையும் றிச்சாட்ஸ் அவர்கள் வட்டுக்கோட்டையில் ஒரு வைத்தியசாலையையும் தாபித்தனர். Dr.ஸ்கடர் (Rev.John Scudder) அவர்களினால் 1820ல் பண்டத்தரிப்பில் ஒரு வைத்திய சாலை தாபிக்கப்பட்டது. Dr.ஸ்கடர் (Dr.Scudder) அவர்கள் 1833ம் வருடம் சாவகச்சேரிக்குச் சென்று அங்கும் வைத்திய வேலைகளைப் பார்த்து வந்தார். இதே வருடம் Dr.நேதன் வாட் (Dr.Nathan Ward) என்பவர் யாழ்ப்பாணம் வந்து வைத்தியம் பார்த்ததோடு வைத்தியமும் கற்பித்து வந்தார். இதன் பின்னர் Dr.சாமுவேல் கிறீன் (Dr.Samuel F.Green) என்பவர் 1847ல் யாழ்ப்பாணம் வந்து ஆங்கில வைத்தியத்தை திறமையாகச் செய்து வந்தார். இவரது காலத்தில் மானிப்பாயில் ஒரு வைத்தியசாலையும் தாபிக்கப்பட்டதுடன் வைத்தியமும் கற்பிக்கப்பட்டது. 1864ம் வருடத்துக்குப் பின்னர் Dr.கிறீன் அவர்கள் ஆங்கில மொழியிலுள்ள வைத்திய நூல்களை தமிழ்படுத்தி தமிழ் மொழி முலமே ஆங்கில வைத்தியத்தை கற்பித்து வந்தார் . இவர் 1873ம் வருடம் அமெரிக்கா சென்றுவிட Dr.சீ.ரீ.மில்ஸ் (Dr.C.T.Mills) அவர்கள் முன் போலவே தமிழ் மொழி மூலம் 1880 வருடம் வரை வைத்தியம் கற்பித்து வந்தார். அக் காலத்தில் இலங்கையில் வைத்தியக் கல்லூரி வேறொன்றும் இருக்கவில்லை. இதன் பின்னரே கொழும்பில் வைத்தியக் கல்லூரி தாபிக்கப்பட்டது. 1898ம் வருடம் காரைதீவில் ஒரு வைத்தியசாலையும் இணுவிலில் ஒரு "மெக்ஸியட்" வைத்தியசாலையும் தாபிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க வல்வெட்டித்துறையிலும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கப்பல்கள் நங்கூரமிட்டு ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடமாகிய ரேவடி என்னும் இடத்தில் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள இடத்தில் ஒரு வைத்திய நிலையம் அமெரிக்க மிஷனரிமாரினால் ஆரம்பிக்கப்பட்டது என நம்பப்படுகிறது. எமது முதாதையரின் கூற்றுப்படியும் மறைந்த எமது தாயார் அமரர் வள்ளியம்மாள் நடராஜாவிடமிருந்து அறிந்ததன் மூலமும் வல்வெட்டித்துறையில் அதுவே முதலாவது ஆங்கில வைத்தியசாலையாகும். அதற்கு முன்னரும் 1940 1950 கள் வரையிலும் நாட்டு வைத்திய முறையே இங்கு நிலவி வந்தது.

இக்காலப் பகுதியில் பரிசாரகர்கள் வாரத்திற்கு ஒரு முறையோ இரு முறையோ தமது மருந்துப் பெட்டிகளுடன் வீடு வீடாக சென்று வைத்தியம் பார்த்து வந்தனர். மகப் பேற்றை பொறுத்தவரையில் இதற்கென பிரசவ விடுதிகள் இல்லாமையினால் அவரவர் வீடுகளிலேயே நடந்து வந்துள்ளது. பிரசவ காலம் நெருங்கியதும் அதனைக் கவனிப்பதற்கு ஊரிலிருக்கும் அனுபவமுள்ள கைதேர்ந்த பெண்கள் வீட்டுக்கு வந்து அயலவரின் உதவியுடன் வைத்தியம் பார்ப்பார்கள். இவை யாவும் அக்கால நாட்டு வைத்திய முறைப்படியே நடந்து வந்துள்ளது.

இக் கை வைத்திய முறையில் குழந்தையைப் பெற்ற தாயின் உடல் நோவை தணிப்பதற்காக காயம் எனப்படும் மூலிகை கலவையைக் கொடுப்பார்கள். இது வேர்க்கொம்பு, மிளகு, இஞ்சி, மஞ்சள் மற்றும் சாரணை மூலிகைகளை சேர்த்து அரைக்கப்பட்டு காய்ச்சிய ஒரு கூழாகும். உடலின் உள் நோவையும்

காயத்தையும் மாற்றுவதனால் இப் பெயர் இதற்கு ஏற்பட்டிருக்கலாம். இவ் வைத்திய முறையில் வல்வெட்டித்துறையில் மீன் வகைகளான ஒட்டி சுறாக் குட்டி போன்றவைகளையும் அவற்றின் இயல்புகளுக்கேற்ப அரைத்த குழம்பாகவும் நல்லெண்ணையில் சுண்டியும் கொடுத்து தாயாரின் பாலூட்டும் சக்தியையும் உடல் வலுவையும் அதிகரிப்பார்களாம்.

இதன் பின்பு வேம்பு, நொச்சி, ஆமணக்கு, பருத்தி, ஆடாதோடை முதலிய இலைகளை நன்கு அவித்து அந்த வெந்நீரில் தாயைக் குளிப்பாட்டு வார்களாம். இது தாயாரின் உடல் நோ குறையும் வரை தொடருமாம். இப்படியான கை வைத்தியம் குழந்தைக்கும் தாய்க்கும் ஒரு சில வாரங்களுக்கு தொடரும். பின்னர் குழந்தைக்கு கிரந்தி எண்ணை வைத்து வளர்ச்சிக்குரிய சில நாட்டு வைத்தியங்களும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வல்வெட்டித்துறை மக்கள் தேக திடகாத்திரமாக வளர்ந்து சாதனையாளர்கள் ஆனார்கள் என்பது வரலாறு. அன்று இத்தகைய இயற்கை மூலிகைகளை நம் முன்னோர்கள் இலகுவாகப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்று வீட்டை அலங்கரிக்கும் குரோட்டன் இலைகளால் எந்த வித பயனும் இல்லை என்பது வேதனைக்குரிய ஒரு விடயம் மட்டுமன்றி மண்ணிலிருந்து அருகிப் போகும் இயற்கையான அரிய முலிகைகள் போன்று சாதனையாளர்களது சாதனைகளும் ஆவணப்படுத்தப்படாமல் அவர்களது அரும் பணிகள் இருந்து விட்டால் வரலாறு மன்னிக்காது.

1870களில் மந்திகையில் ஆங்கில வைத்திய வசதியுடன் அரச வைத்திய சாலை நிறுவப்பட்டு வடமராட்சி மக்களுக்கு சேவை செய்து வந்த போதிலும் வல்வெட்டித்துறையை பொறுத்த வரையில் மந்திகை சென்று பிரசவம் பார்ப்பதில் பல சிரமங்கள் இருந்தன. இக் கால பகுதியில் வல்வெட்டித்துறையில் தெணியம்பையில் ஒரு சிறிய பிரசவ விடுதி இயங்கி வந்தாதாக அறியக் கிடைக்கின்றது.

இவ்வாறு வல்வை மக்களும் அயல் கிராம மக்களும் தமது சனப்பெருக்கத்திற்கேற்ப ஈடு செய்து கொள்ள முடியாது அவஸ்தைப் பட்ட காலத்தில் வல்வை மாதா பெற்றெடுத்த பரோபகாரியான அமரர் திரு. இளையதம்பி அப்புகுட்டியா பிள்ளை எனும் வல்வெட்டித்துறை பெருமகனின் எண்ணக் கருவில் வந்துதித்த சிந்தனையே இன்றைய வளம் பொருந்திய பிரதேச வைத்திய சாலையாகிய அன்றைய ஊறணி இந்திராணி ஆஸ்பத்திரியாகும்.

ஆராரோ ஆரிவரோ

ஆராரோ ஆரிவரோ

ஆரடித்து நீயழுதாய்

அடித்தாரைச் சொல்லியழு

ஆக்கினைகள் செய்து வைப்போம்...............

என்று தாலாட்டுப் பாடிய மனைவி சாரங்கம்மாவும் மகள் இந்திராணியும் அவரது அக்காலச் சிந்தனையின்போது அவர் மனத் திரையில் நிச்சயம் ஓடியிருந்திருப்பார்கள்.

அவர் இதற்கான நிதியை வேறு யாரிடமும் பெற்றுக் கொள்ளாது தனது சொந்த பணத்திலேயே செலவு செய்தார். வல்வை மக்கள் கடலோடிகள் என்பதற்கு இக் கட்டிட நிர்மாணமும் சான்று பகரும். இதற்குரிய கட்டடப் பொருட்கள் பல முக்கியமாக செங்கற்கள் அண்ணளவாக 28000 தமது சொந்த வத்தைகள் (சிறிய பாய்மரக் கப்பல்) மூலம் இந்தியாயவிலிருந்து கொண்டு வந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

## இந்திராணி வைத்தியசாலை வரலாற்று குறிப்புக்களை நோக்கினால்

1. சுபவேளையில் அடிக்கல் 30.05.1945ல் அன்றைய இலங்கை தேசாதிபதி கௌரவ Sir Henry Monk Mason Moor அவர்களால் நாட்டப்பட்டது
2. அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள்
   - ஆண் நோயாளருக்கான விடுதி (Male Ward)
   - பெண் நோயாளருக்கான விடுதி ( Female ward)
   - வெளி நோயாளரகளைப் பார்வையிடும் பகுதி (OPD)
   - மருந்து விநியோகிக்கும் அறை
   - இவை அனைத்திற்கும் பின்புறமாக பிரசவ விடுதி (Labour Room)

வைத்திய சாலைக்கு தன் மகளின் பெயர் கொண்ட " இந்திராணி வைத்திய சாலை" எனவும் பிரசவ விடுதிக்கு தனது மனைவியின் பெயர் சொல்ல"சாரங்கம்மா பிரசவ விடுதி" என்றும் நாமம் சூட்டி மகிழ்ந்தார்.

இவ் வைத்தியசாலையை நிறுவுவதற்கு ஏற்பட்ட செலவு அக் கால மதிப்பின் படி ஏறக்குறைய ரூபா.100,000.00 ஆகும்.

3. திறப்பு விழா

சகல வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டு சிறிது கால தமாமதத்தின் பின் ஓரளவுக்குத் தேவையான ஆளணி கிடைக்கப் (Staff –Human Resource) பெற்றதும் சுபமுகூர்த்த வேளையில் இலங்கை அரசின் அன்றைய சுகாதாதர அமைச்சர் கௌரவ George De Silva அவர்களால் 01.02.1947ல் திறந்து வைக்கப்பட்டது.

4. முதற் குழந்தை

திறந்த அடுத்த நாளாகிய 02.02.1947ல் எம்முடன் இன்று வல்வை சிவன் கோவில் தெற்கு வீதியில் வசித்து வரும் தங்க வேலாயுதம் பொன்னம்பலம் (யோகச் சந்திரன்) என்பவர் இவ்வைத்திய சாலையின் முதற் குழந்தையாக பிறந்தமையால் இவருக்கு வல்வை மக்களது

**தந்தையாயாராகப் போற்றப்பட்ட ஸ்தாபகர் திரு. இ.அப்புகுட்டியாப்பிள்ளை குடும்பத்தினர் தங்கச் சங்கிலி காப்பு அணிந்து அக மகிழ்ந்தனர்.**

**( இம் முதற் குழந்தையும் வைர விழா காணும் மைந்தனாக 23.01.2011ல் ஸ்தாபகரின் நினைவுச் சிலை திறப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டார்.)**

5. **இரண்டாவது குழந்தையாக நடராஜா வடிவேல் (இராஜரத்தினம் எனும் எனது முத்த சகோதரர்.) என்பவர் பிறந்தார் .டென்மார்க்கில் வசிக்கும் இவர் வைர விழாவிற்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.**

6. **ஆரம்ப வைத்தியர்கள்**
   **ஏற்கனவே ரேவடியில் இயங்கி வந்த மத்திய மருந்தகத்தில் வைத்தியத்தில் ஈடுபட்டிருந்த திரு.வோலாதயுதபிள்ளை செல்லத்தம்பி அவர்களே ஆரம்ப காலத்தில் கடமையாற்றியுள்ளதாகவும் அவரைத் தொடர்ந்து** Dr. **சோதிநாதன்** Dr. P.**நடராஜா ஆகியோர் பொறுப்பதிகாரிகளாக கடமையாற்றியதாகவும் தகவல்கள் கூறுகின்றன.**

   *(மேலதிக தகவல்களுக்கு வைர விழாச் சிறப்பு வெளியீட்டை நோக்கவும் )*

7. **நிறுவுனருக்கு கௌரவம்**
   **திரு அப்புக்குட்டியாபிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி அன்றைய அரசு அவருக்கு முகாந்திரம்** (Sir) **மற்றும் சமாதன நீதவான்** (JP) **எனும் பட்டங்களை வழங்கி கௌரவித்தது. பிரித்தானியாவில் இயங்கும் வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கம் எமது வைர விழா சிறப்பு மலருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. இலங்கை அரசின் முதல் பிரதமரான கௌரவ.** D.S. **சேனநாயக்கா அவர்கள் திரு. அப்புக்குட்டியாப்பிள்ளை போன்ற இலங்கை அரசுக்கு நன்கொடை வழங்கிய இலங்கை பிரஜைகள் வேறு எவரும் இருந்திருக்கவில்லை என்று கூறியதாக குறிப்பிட்டுள்ளனர்.**

**இவ்வாறு உருவான இந்திராணி வைத்தியசாலைப் பணிகள் பலரது சேவை களுக்குப்பின் 1997லிருந்து டாக்டர் க.மயிலேறும்பெருமாள் எனும் மண்ணின் மைந்தனின் பொறுப்பிலிருந்து செயற்பட்டு வருகின்றது.**

**வல்வெட்டித்துறை மண் வரலாற்று மைந்தர்களைப் படைக்கின்றதா? அல்லது வல்வை மைந்தர்கள் வரலாற்றைப் படைக்கின்றார்களா?** **இக் கேள்விகள் தர்க்க ரீதியாக இருந்தாலும் மண்ணின் வரலாறு நீண்டது என்ற ரீதியில் வல்வை மண்ணே வரலாற்று வல்லுனர்களை படைக்கின்றது எனக் கொள்வோமாக.**

**திரு.இ.அப்புக்குட்டியாப்பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி ஒரு தடைவை வல்வைக்கு வந்த பிரபல அரசியல்வாதி அரசினால் அமைக்கப்பட்ட கட்டிடத்தை திறந்து வைப்பதற்காகத்தான் வழமையாக எங்களை அழைப்பர். ஆனால் தாங்கள் கட்டிய கட்டிடத்தை திறப்பதற்கு வல்வை மண் எங்களை அழைத்துள்ளது எனப் பெருமைப்படுத்தினார்.**

**எனினும் வல்வை மண்ணின் சுகாதாரத் தேவைகள் மனித வளங்களுக்கேற்ப அதிகரிக்காமை பல சேவைகளுக்கு வழி வகுத்தது.**

**இக் கால கட்டத்தில் அதாவது 1960களில் வல்வை மண் தனது மற்றொரு புதல்வனை அறிமுகமாக்கியது. அவர்தான் திரு. சிற்றம்பலம் விஷ்ணுசுந்தரம் எனும் பிரபல வர்த்தகராவார். இந்திராணி வைத்தியசாலையின் முன்பக்கமாக இரு மாடிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதியை தனது சொந்த நிதியில் நிறுவிக்கொடுத்தார். இதற்கு தன் தாயார் பெயரான திருமதி சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை பிரவச விடுதி எனும் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். இத்தொகுதி மேல்மாடியில் குழந்தைகள் விடுதியும் கீழ் மாடியில் பிரசவ விடுதியுமாக செயற்படும் வகையில் அமைந்துள்ளது. இது 02.02.1966ல் அப்போதைய சுகாதார அமைச்சர் கௌரவ** M.D.H **ஜெயவர்த்தன அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இத்துடன் 42 படுக்கை வசதி கொண்ட வைத்தியசாலை 87 படுக்கை வசதி கொண்டதாக விஸ்தரிக்கப்பட்டது. இவ்வாறு வைத்தியசாலைப் பணி நாட்டில் ஏற்பட்ட போர் சூழ்நிலையில் சிறிது தடுமாறினாலும்** Dr. **க. மயிலேறும்பெருமாள் இவ்வைத்தியசாலையை பொறுப்பேற்று தனக்கே உரித்தான பாணியில் பல திட்டங்களை வகுத்து பல பாராட்டுகளை பெற்று ஒரு முன்னணி வைத்தியசாலையாக நடாத்தி வருகின்றார்.**

**பிரதி மாகாண பணிப்பாளர் திரு. ஆ. கேதீஸ்வரன் அவர்கள் குறிப்பிடும் பொழுது தனது ஆளுமைக்குட்பட்ட இத்தரத்திலான வைத்திய சாலைகளுள் இது எல்லா வகையிலும் முன்னணியில் நிற்பதாகவும் தற்பொழுது நிகழ்த்தப்படுகின்ற போட்டிகளில் சிறந்த பிரதேச வைத்தியசாலையாக** (Best Divisional Hospital) **ஆக தெரிவு செய்யப்படலாம் எனவும் எதிர்வு கூறியுள்ளார்.**

**1966 வரை வல்வை மக்களால் மட்டும் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்ட போதிலும் பின்னர் இலங்கை அரசாங்கமும் தனது பங்களிப்பை செய்யத் தொடங்கியது.**

Dr. **க. மயிலேறும்பெருமாள் அவர்கள் ஏற்கனவே இயங்கிவந்த வல்வை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபைக்கு தலைமை தாங்கி அதனை புனரமைத்து வலுவூட்டியதன் மூலமும் தன் சொந்த ஆளுமையினாலும் வல்வை நலன் விரும்பிகள், புலம் பெயர் வல்வை மக்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு பிரமுகர்கள் என்போரது பேராதரவை ஒன்று திரட்டி அரும்பெரும் சாதனைகள் மூலமும் வல்வையின் வரலாற்று மைந்தர்களுள் ஒருவராக திகழ்ந்து இவ் வைத்தியசாலைக்கும் அதன் வளர்ச்சிக்கும் அரும் பணி ஆற்றி வருகின்றார் என்பது வெறும் புகழ்ச்சிக்காகவல்ல.**

**இதனங்கமாகவே 23.01.2011ல் இந்திராணி வைத்தியசாலை நிறவுனர் சிலை** Dr. **க. மயிலேறும்பெருமாள் அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டதுடன் அமரர். இ. அப்புக்குட்டடியாப்பிள்ளை, அமரர் இந்திராணி மற்றும் அமரர். சி. விஷ்னுசுந்தரம் ஆகியோரின் உருவப் படங்கள் வல்வை மண்ணில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வைத்திய சாலை வளாகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டன.**

இன்று இவ் வைத்தியசாலை சகல வசதிகளையும் கொண்டு பசுமை நிறைந்த சுற்றுப் புறச் சூழலில் பாக்கு நீரிணையில் இருந்து வீசும் இதமான காற்றுடன் ஓர் அழகிய சுற்றுலா விடுதிபோல காட்சி அளிக்கின்றது. இலங்கையில் ஏனைய பகுதிகளில் இருந்து வருபவர்கள் முக்கியமாக இங்க தங்கி சிகிச்சை பெறும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவ திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் அன்னை திருமதி வேலுப்பிள்ளை பார்வதியம்மாவை பார்க்க வருபவர்கள் மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அனைவருமே மீண்டும் ஒரு முறையாவது இவ் வைத்திய சாலையை தரிசிக்க வரும் எண்ணத்துடனேயே திரும்பிச் செல்கின்றனர்.

புலம் பெயர் வாழ் உறவுகளின் பெற்றோர்கள் இங்க தங்கி வைத்திய வசதி பெற்று வருகின்றனர். இவ் வயோதிபர்கள் வைத்திய அதிகாரிகளையும் ஊழியர்களையும் தமது சொந்த உறவுகளாகவே கருதி பழகி நிம்மதி கொள்கின்றமையை நாம் அவதானிக்கக் கூடியதாக உ ள்ளது.

இப்படிப்பட்ட இவ் வைத்திய சாலைக்கு ஆகேக் குறைந்த அளவு வைத்திய அதிகாரிகளும் ஊழியர்களும் வந்து சேவையாற்ற முன்வரும் பட்சத்தில் பொது மக்கள் நன்மை அடைவதுடன் பல சாதனைகளும் படைக்கப்படலாம்.

தியாக சிந்கையுடன் செயற்பட்டால் எல்லாமே கை கூடும் என்பதற்கு எடுத்துக் காட்டாகதான் Dr.K.மயிலேறும்பெருமாள் அவர்களின் தலைமையிலான வல்வெட்டித் துறை பிரதேச வைத்திய சாலையின் அபிவிருத்திக் குழு இயங்கி வருகிறது.

அபிவிருத்திச் சபையின் பணி வைத்திய சேவைகளுடன் நின்றுவிடவில்லை வல்வை மண்ணில் வாழ வேண்டிய மக்களும் சாதனையாளர்களும் புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்வதாலும் இந்தியாவில் அகதிகளாக இருப்பதாலும் பொதுப் பணிகளை எடுத்துச் செயற்படுத்த அரிதாகவே இங்கு சிலர் வாழ்ந்து வருவதால் வல்வை மக்கள் துவண்டு விடாமலிருக்கவும் சாதனையாளர்களையும் கனவான்களையம் கௌரவித்து ஊக்குவிக்கும் நற் செயல்களிலும் இச் சபை ஈடுபட்டு வருகின்றது.

இதன் ஒரு படியே இந்திராணி வைத்திய சாலையை உருவாக்கிய திரு. இ. அப்புக்குட்டியாப்பிள்ளை அவர்கட்கு சிலை எழுப்புதலும் அவரைத் தொடர்ந்து அர்ப்பணிப்பு செய்த திரு. சி. விஷ்னுசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து கௌரவித்தலுமாகும். இவ் வைர விழா 2007ல் நிகழ்ந்திருக்க வேண்டுமாயினும் நாட்டுச் சூழ்நிலை காரணமாக 23. 01. 2011ல் நிகழ்த்தப்பட்டது.

இவ் அபிவிருத்திச் சபையானது வல்வையைச் சேர்ந்த மாணவர்களில் 5ம் ஆண்டு புலமை பரிட்சையில் சித்தி அடைந்தவர்களையும் வேறு கல்வி கேள்விகளில் திறம்பட பெறுபேறுகளை பெற்றவர்களையும் விளையாட்டு வீரர்களையும் தம் தொழில் ரீதியாக பல உயர் பதவிகளைப் பெற்றவர்களையும் வருடாந்தம் நிகழ்வெடுத்து பாராட்டி வருகின்றது.

**இத்துடன் நின்றுவிடாது இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கல் சேவையை காலத்திற்கு காலம் வைத்திய சாலையில் நடாத்துவது மட்டுமல்லாது பின்தங்கிய கிராம மக்களை தேடிச் சென்றும் நல்கி வருகின்றது. இதைவிட விசேடமான சேவையாக இரத்த தான நிகழ்வுகளை காலத்திற்கு காலம் நடாத்தி யாழ். போதனா வைத்திய சாலையின் நன் மதிப்பையும் பெற்று வருகின்றது. இவ்விரத்த தானம் செய்வதில் எமது வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் நிர்வாக சபையின் உறுப்பினரும் 58 வயதானவருமான திரு. துரைச்சாமி சத்திவேல் அவர்களின் சேவையை நாம் விசேடமாக பாராட்ட வேண்டும். தனது 17 வயதில் தொடங்கிய குருதிக் கொடையை இதுவரை 36 தடவைகள் வழங்கி இலங்கையில் முன்னோடியாக திகழும் இவருக்கு பல பாராட்டு வைபவங்களும் பத்திரிகை மூலமாக வாழ்த்துக்களும் கிடைத்ததுடன் வல்வையின் புலம் பெயர் வாழ் மக்களின் கவனத்தையும் இவர் ஈர்த்துள்ளார். இவரும் வல்வையின் வரலாற்றில் பதியப்பட வேண்டிய சாதனையாளரே.**

**23.01.2011 ல் சாதனையாளருக்கு விழா எடுக்கும் இவ் அபிவித்தி சபை அடுத்த கட்டமாக பாக்கு நீரிணையை முதன் முதலில் 1954 நீந்திக் கடந்த வீரத் தமிழன் திரு.மு.நவரத்தினசாமி அவர்களுக்கும் கின்னஸ் புத்தகத்தில் பல சாதனைகள் படைத்த** V.S.C.**ஆனந்தன் எனும் வல்வை மைந்தன் “ஆழிக் குமரன் ஆனந்தனுக்கும்” சிலைகள் நிறுவி கௌரவிக்க திட்டம் இடப்பட்டுள்ளது. 1943ல் பிறந்த அவர் 1975க்கும் 1982க்கும் இடைப்பட்ட காலத்தில் 20 தேசிய ரீதியான சாதனைகளைப் புரிந்துள்ளார். இவற்றில் 7 சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளன. வல்வை மண் மீண்டும் மீண்டும் எழ வைத்திய சாலை அபிவிருத்திச்சபை தொடர்ந்து நல்ல தலைமைத்துவம் கொண்ட நிர்வாக சபையாக செயலாற்ற மக்கள் தமது ஆக்க பூர்வமான ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறோம். இதே போன்று எல்லா கிராமங்களிலும் நகர்களிலும் ஒருங்கிணைந்த செயற்பாடு ஏற்படுமாயின் நாம் இலங்கை அரசாங்கத்தை மட்டும் நம்பிவிடாது எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள முடியும்.**

**நவநாகரீக யுகத்தில் காலடி எடுத்து வைக்கும் இன்றைய இளம் சந்ததியினரே எதிர் காலம் என்பது கடந்த காலத்தின் பக்கங்களே என்பதை மனதிற் கொண்டு கடந்த காலங்களில் எம்மவர்களால் செய்யப்பட்ட அரிய சாதனைகளை தொடர்ந்து எதிர் வரும் காலங்களில் நீங்களும் சாதனை படைத்து தமிழ் அன்னைக்கும் வல்வை மாதாவுக்கும் பெருமை சேர்த்து வாழ வேண்டும் என்பதே நமக்கு நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற பணியாகும். இவற்றை ஆவணப்படுத்தி வைத்து வல்வை மாதாவுக்கும் பெருமை சேர்த்து வாழ வேண்டும். இதனையே வள்ளுவப் பெருந்தகையும் “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்று தன் குறள் மூலம் எடுத்துரைத்துள்ளார். காலம் நமக்காக காத்திருக்காது நாம் காலத்திற்காக காத்திருந்து நன்மைகள் செய்வோம்.**

**வாழ்க தமிழ் வளர்க வல்வை மண்.**

திரு. நடராஜா சிவரத்தினம்

வல்வை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபை உறுப்பினரும்

ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளரும்.




வல்வெட்டித்துறை பிரதேச சபை வைத்தியசாலை நிர்வாக சபை உறுப்பினர்கள்



**அமரர் முகாந்திரம் இளையதம்பி அப்புக்குட்டியாப்பிள்ளை**

**நிறுவுனர் இந்திராணி வைத்தியசாலை 1947**



**அமரர் சிற்றம்பலம் விஷ்ணுசுந்தரம்**

**நிறுவுனர் பார்வதிப்பிள்ளை பிரசவ விடுதி 1966**



அமரர் செல்வி. அப்புக்குட்டியாப்பிள்ளை இந்திராணி

அன்னாரது பெயரில் தான் இந்திராணி வைத்திய சாலை நிறுவப்பட்டது

s



ஊர்வலம்



நிறுவுனர் சிலை திறப்பு



முங்களவளக்கேற்றல்



சிறுவுனர் சிலை (திரு.இ.அப்புக்குட்டியாபிள்ளை அவர்கள்)